உதவி அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்.
(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்)
**முன்னிலை: – திருமதி. வா. தீபா, எம்.எல்.,**
உதவி அமர்வு நீதிபதி, திண்டுக்கல்.
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.** 409/2024
C.N.R. No.TNDG03–078147–2024

தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய
குற்ற எண்.835/2023 ………… குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

தார்சியூஸ் பிரபு, வயது 20/2023
த/பெ. ஜான் பிரிட்டோ,
10/239–1, மேற்குத் தெரு,
சிறுநாயக்கன்பட்டி, ஏ.வெள்ளோடு,
திண்டுக்கல். ……… எதிரி.

எதிரி மீதான குற்றம் : இந்த வழக்கின் புகார்தாரரின் தந்தையான ராஜு என்பவர் கடந்த 14.12.2023ம் தேதி வியாழக் கிழமை மதியம் சுமார் 12.45 மணியளவில், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வடக்கு தெற்காக செல்லும் திருவள்ளுவர் சாலையில், மேற்கிலிருந்து கிழக்காக சாலையை கடக்க முயன்றபோது, எதிரி TN 57 BP 8960 என்ற இருசக்கர வாகனத்தை மேற்படி திருவள்ளுவர் சாலையில் வடக்கிலிருந்து தெற்காக அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ராஜு என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் தூக்கி வீசப்பட்ட ராஜுவிற்கு வலது பக்க புருவத்திற்கு அருகிலும், இரண்டு கால் பாதங்களிலும் ரத்தக் காயம் ஏற்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை

பெற்று பின்னர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவனையில் மேல் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டும், பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் 15.12.2023ம் தேதி அதிகாலை 03.15 மணியளவில் இறந்து போவதற்கு காரணமான எதிரியின் குற்ற செய்கைக்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் வாதுரை : | குற்றவாளி இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு : | குற்றவாளி இல்லை. |
| தீர்ப்பு : | அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப் படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்களுக்கு குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை சட்டப் பிரிவு 248(1) கு.வி.மு.ச–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |

இந்த வழக்கில், வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இந்த வழக்கு என் முன்பாக 24.04.2026–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் வழக்கறிஞர் திரு. M.விஜயேந்திரன் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில் திரு.P.சதீஸ்குமார் அவர்களும், முன்னிலையாகி வாதிட்டதைக் கேட்ட பின்னர், இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை

பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இறுதியாக 24.04.2026–ம் தேதி அன்று விசாரணைக்கு வந்து, இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்த பின்னர், இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

<u>**தீர்ப்புரை**</u>

<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>

இந்த வழக்கின் புகார்தாரரின் தந்தையான ராஜு என்பவர் கடந்த 14.12.2023ம் தேதி வியாழக் கிழமை மதியம் சுமார் 12.45 மணியளவில், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வடக்கு தெற்காக செல்லும் திருவள்ளுவர் சாலையில், மேற்கிலிருந்து கிழக்காக சாலையை கடக்க முயன்றபோது, எதிரி TN 57 BP 8960 என்ற இருசக்கர வாகனத்தை மேற்படி திருவள்ளுவர் சாலையில் வடக்கிலிருந்து தெற்காக அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ராஜு என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் தூக்கி வீசப்பட்ட ராஜுவிற்கு வலது பக்க புருவத்திற்கு அருகிலும், இரண்டு கால் பாதங்களிலும் ரத்தக் காயம் ஏற்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவனையில் மேல் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டும், பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் 15.12.2023ம் தேதி அதிகாலை 03.15 மணியளவில் இறந்து போவதற்கு காரணமான எதிரியின் குற்ற செய்கைக்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் தண்டிக்கத் தக்க குற்றம் புரிந்துள்ளார் என திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. திண்டுக்கல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2–ல் எதிரி ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

3. எதிரியிடம் குற்றப் பத்திரிக்கையில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் விளக்கி கூறி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கூறினார்.

4. அதன் பேரில் அரசுத் தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில், அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை, மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>5. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :–</u>

i) நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 சிவபாலன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில், இந்த வழக்கில் இறந்துபோன ராஜு தனது தகப்பனார் என்றும், 14.12.2023ம் தேதி மணி சுமார் 01.00 அளவில் தான் மேட்டுப்பட்டியில் வேலை செய்து கொண்டு இருந்தபோது, விபத்து நடந்த இடத்தில் இருந்தவர்கள் தனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு தனது அப்பாவிற்கு இராஜ ராஜேஸ்வரி மருத்துவமனை அருகில் விபத்து ஏற்பட்டுவிட்டது என்று கூறியவுடன், உடனே தான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, தனது அப்பாவை ஆம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டு இருந்தார்கள் என்றும், திண்டுக்கல் அரசு மருத்துவ மனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள் என்றும், தான் அங்கு சென்று பார்த்தபோது, தனது அப்பாவிற்கு வலது கண் மற்றும் தலையிலும் இரத்த காயம்

ஏற்பட்டு இருந்ததாகவும், தான் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று விசாரித்தபோது, தார்சியூஸ் பிரபு என்பவர் யமஹா இரண்டு சக்கர (வாகனத்தின் பதிவு எண். TN 57 BP 8960) வாகனத்தில் அதிவேகமாகவும், ஆரன் அடிக்காமலும் வந்து தனது அப்பா மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள் என்றும், மருத்துவமனைக்கு வந்த போலீசார் தன்னை விசாரிக்கும்போது, புகார் மனு கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், தன்னுடன் தனது சித்தப்பா முத்துச்சாமி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார் என்றும், அதன் பிறகு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், அன்று இரவே தனது அப்பா இறந்துவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

ii) அ.சா.2 மணிகண்டன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில், திண்டுக்கல் இராஜ ராஜேஸ்வரி மருத்துவமனை அருகே உள்ள டீக்கடையில் டீ மாஸ்டராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 14.12.2023ம் தேதி மதியம் சுமார் 12.45 மணிக்கு தான் கடையில் இருந்தபோது, தங்கள் கடை முன்பாக ஒரு இருசக்கர வாகனம் மோதிய சத்தம் கேட்டு போய் பார்த்தபோது ஒரு ஐயா அடிபட்டு கிடந்தார் என்றும், அவருக்கு தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டு இருந்ததாகவும், பக்கத்தில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து அதில் அவரை ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றதாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 கணேசன் என்பவர் தனது சாட்சியத்தில், போலீசார் சம்பவ இடத்தினை பார்வையிட்டு வரைபடம் வரைந்ததில் தானும், நாகராஜ் என்பவரிடமும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் கையொப்பம் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

iii) அ.சா.4 முகமது இப்ராஹிம் என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியைத் தெரியும் என்றும், 14.12.2023ம் தேதி பகல் 12.45 மணிக்கு தனது கடைக்கு எதிரே கூட்டமாக இருந்ததாகவும், சத்தம் கேட்டு போய் பார்த்தபோது, தங்கள் கடைக்கு டீ சாப்பிட வரும் ஒரு பெரியவர் விழுந்து கிடந்தார் என்றும், நெற்றியின் வலது பக்கம் காயம் ஏற்பட்டு இரத்தக் காயத்தோடு இருந்தார் என்றும், அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஏற்றிவிட்டதாகவும், அவர் மீது மோதிய FZ இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்து அடிபட்டு ஆஜர் எதிரியும் அழுது கொண்டு இருந்தார் என்றும், அவரை தான் தூக்கிவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

iv) அ.சா.5 வெள்ளையன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில், ஆஜர் எதிரியைத் தெரியும் என்றும், சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக பகல் 12.30 மணிக்கு மேல் சத்தம் கேட்டு தான் வேலை பார்த்துக் கொண்டிருந்த சிப்ஸ் கடையில் இருந்து ஓடிப்போய் பார்த்தபோது, அங்கு ஒரு பெரியவர் அடிபட்டுக் கிடந்தார் என்றும், பக்கத்தில் போய் பார்த்த போதுதான் விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தைப் பார்த்ததாகவும், அங்கு கூட்டமாக இருந்ததாகவும், பெரியவர் இரத்தத்தோடு கிடந்தார் என்றும், அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஏற்றிவிட்டதாகவும், அவர் மீது மோதிய இருசக்கர வாகனத்தை காம்பவுண்டு சுவர் ஓரமாக எடுத்து நிறுத்திக் கொண்டு இருந்தார்கள் என்றும், ஆஜர் எதிரியை அங்கு இருந்தவர்கள் சத்தம் போட்டுக் கொண்டு இருந்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

v) அ.சா.6 திரு. குமார் சிறப்பு சார்பு ஆய்வாளர் தன்னுடைய சாட்சியத்தில், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் கடந்த 14.12.2023ம் தேதி மதியம் 13.45 மணிக்கு தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, சிவபாலன் என்பவர்

தனது அப்பா ராஜு என்பவர் மீது இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தியதாக தார்சியூஸ் பிரபு என்பவர் மீது கொடுத்த புகார் மனுவினைப் பெற்று நிலைய குற்ற எண்.835/2023, பிரிவுகள் 279, 337 இ.த.சவின் கீழ் வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் அசலையும் இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும், மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

vi) அ.சா.7 திரு. மனோகரன், சார்பு ஆய்வாளர் தன்னுடைய சாட்சியத்தில், மேற்படி வழக்கு கோப்பை பார்வையிட்டு, சம்பவ இடத்தை பார்வையிட்டு மகஜர் சாட்சிகளான கணேசன் மற்றும் நாகராஜன் ஆகியோர் முன்பு அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்து, மேற்படி பார்வை மகஜர் சாட்சிகளையும், சம்பவ இடத்தில் பார்த்த சாட்சிகள் முகமது இப்ராகிம், மணிகண்டன், வெள்ளையன் ஆகியோரை தனித் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று, காயம்பட்ட நபர் ராஜு, த/பெ. சிக்குபோலன் மேல் சிகிச்சைக்காக மதுரை, அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதைத் தொடர்ந்து, மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ராஜு சுயநினைவு இல்லாமல் மயக்க நிலையில் இருந்ததால், அவருக்கு துணையாக இருந்த வாதி சிவபாலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அதன்பின்பு மதுரை அரசு மருத்துவமனையில் இருந்து திண்டுக்கல் வந்து காவல் நிலையத்தில் ஆஜரில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 15.12.2023ம் தேதி 06.50 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்த ராஜு இறந்துவிட்டதாக கிடைத்த தகவலைப் பெற்று, 07.00 மணிக்கு சட்டப்பிரிவு 279, 337 இ.த.ச.வில் இருந்து பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் கீழ் அ.சா.ஆ.5 சட்ட மாறுதல் செய்து

அறிக்கை தயார் செய்து, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மேல் விசாரணைக்காக வழக்குக் கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

vii) அ.சா.8 திரு. வெங்கடாசலபதி, காவல் ஆய்வாளர் தன்னுடைய சாட்சியத்தில், தங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் திரு. கண்ணன் அவர்களை தனக்கு நன்கு தெரியும் என்றும், அவருடைய கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு நன்கு பரிட்சையம் என்றும், அவர் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும், வழக்கின் காலதாமத்தை தவிற்கும் பொருட்டு வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்கள் பதிவு செய்த மேற்படி வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் மனோகரன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், அவர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு முதல் விசாரணை மேற்கொண்ட நிலையில் விபத்தில் காயம்பட்ட ராஜூ என்பவர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டபடியால், வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.சவில் இருந்து, சட்டப்பிரிவை 279, 304(A) இ.த.ச.வாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், வழக்கை மேல் விசாரணை செய்வதற்காக ஆய்வாளர் திரு. கண்ணன் அவர்களின் பார்வைக்கு வழக்கு கோப்பை ஒப்படைத்துள்ளார் என்றும், ஆய்வாளர் அவர்கள் 15.12.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு திண்டுக்கல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக சென்று, விபத்தில் இறந்துபோன ராஜூ என்பவரின் பிரேதத்தின் மீது பகல் 10.00 மணி முதல் 12.00 மணி வரை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு, அ.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கை பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கின் வாதியான சிவபாலன் என்பவரை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தும்,

பிரேத விசாரணை சாட்சிகளான தனபாலன், அழகர்சாமி மற்றும் விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 57 BP 8960 யமஹா இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பியும், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. இளங்கோ, விபத்தில் காயம்பட்ட ராஜூ என்பவருக்கு முதலுதவி சிகிச்சை செய்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி. நிஷா மற்றும் விபத்தில் காயம்பபட்ட நபர் மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்தபோது, அவர் இறந்துவிட்டபடியால், இறப்பு தகவலை உறுதி செய்த மருத்துவர் திரு. தீபக் சங்கர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், விபத்தில் காயம்பட்டு இறந்துபோன ராஜூ என்பவரின் பிரேத்தை பிரேத கூறாய்வு மேற்கொள்வதற்காக முதல்நிலை காவலர் திரு. பாண்டியன் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி பிரேத கூறாய்வு மேற்கொண்ட திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. அகமது சேக் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும், இவ்வழக்கின் எதிரியை 19.12.2023ம் தேதி 11.30 மணிக்கு நிலையம் முன்பாக காரணம் கூறி கைது செய்து, தக்க பிணையில் விடுவித்துள்ளார் என்றும், மேற்படி சாட்சிகளை விசாரணை செய்தும், அவருடைய புலன் விசாரணையை முடித்துக் கொண்டு வழக்கின் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இந்த எதிரிக்குப் பாதகமாகத் தோன்றிய சங்கதிகளை குறித்து எதிரியிடம் பிரிவு 351 BNSS–ன் கீழ் விசாரணை செய்தபோது, எதிரி அரசுத்தரப்பு சாட்சி கூறுவது பொய் என்றும், பொய் வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், தமது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறியுள்ளார்.

எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததால், விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

7. இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலையான அரசு தரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் முன்வைத்த வாதங்களும், எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் முன் வைத்த வாதங்களும் இந்நீதிமன்றத்தால் கவனமாக கருத்தில் கொள்ளப்பட்டன.

8. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச் சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**தீர்வு:–**

9. அரசுதரப்பு வழக்கில், இந்த வழக்கின் புகார்தாரரின் தந்தையான ராஜு என்பவர் கடந்த 14.12.2023ம் தேதி வியாழக் கிழமை மதியம் சுமார் 12.45 மணியளவில், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வடக்கு தெற்காக செல்லும் திருவள்ளுவர் சாலையில், மேற்கிலிருந்து கிழக்காக சாலையை கடக்க முயன்றபோது, எதிரி TN 57 BP 8960 என்ற இருசக்கர வாகனத்தை மேற்படி திருவள்ளுவர் சாலையில் வடக்கிலிருந்து தெற்காக அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ராஜு என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் தூக்கி வீசப்பட்ட ராஜுவிற்கு வலது பக்க புருவத்திற்கு அருகிலும், இரண்டு கால் பாதங்களிலும் ரத்தக் காயம் ஏற்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவனையில் மேல் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டும், பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் 15.12.2023ம் தேதி அதிகாலை 03.15 மணியளவில் இறந்து போவதற்கு காரணமான எதிரியின் குற்ற செய்கைக்காக எதிரி மீது இ.த.ச

பிரிவுகள் 279, 304(A)-ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

10. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை, மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

11. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வழக்கில் முன்னிலைப் படுத்தப்பட்ட சாட்சியங்களும், சான்றாவணங்களும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன. இரு தரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டு அவையும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு வழக்கை பொறுத்த வரையில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து அதை எதிரி தான் செய்தார் என்பதை நிரூபிப்பதற்கு முன்னிலைப் படுத்தப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 இவ்வழக்கின் வாதி ஆவார். இவர் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டது குறித்தும், அதன் சங்கதிகள், எதிரி மற்றும் எதிரியின் வாகனத்தைப் பற்றியும் புகார் கொடுத்தது குறித்தும் சாட்சியம் அளிப்பவராகவும், அ.சா.2, அ.சா.4, அ.சா.5 ஆகியோர் சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்தும், எதிரி பற்றியும், விபத்து ஏற்படுத்திய வாகனம் பற்றியும் சாட்சியம் அளிப்பவர்களாகவும், அ.சா.3 பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததில் சாட்சிகளாக இருந்தது பற்றியும், அ.சா.6 சிறப்பு சார்பாய்வாளர் அ.சா.1 கொடுத்த புகாரைப் பெற்று வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தது குறித்தும் சாட்சியமளிப்பவராகவும், அ.சா.7 சார்பு ஆய்வாளர் மேற்படி வழக்கு கோப்பை தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சட்டப் பிரிவுகளை மாறுதல்

செய்து மேல் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தது குறித்தும், கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.8 காவல் ஆய்வாளர் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பவராகவும் காட்டப்பட்டு, மேற்படி சாட்சிகள் சாட்சிப் பட்டியலில் காட்டப்பட்டு அதில் கண்டுள்ளவாறு விசாரணை செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

12. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களை உறுதி செய்வதற்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக காட்டப்பட்டுள்ள அ.சா.2, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியம் இந்த வழக்கில் மிக முக்கியமான சாட்சியங்களாகும். அவர்களது சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.2 அவரது முதல் விசாரணையில், " நான் திண்டுக்கல் ராஜ ராஜேஸ்வரி மருத்துவமனைக்கு அருகே உள்ள டீக்கடையில் டீ மாஸ்டராக வேலை செய்து வருகிறேன் என்றும், கடந்த 14.12.2023ம் தேதி மதியம் சுமார் 12.45 மணிக்கு நான் கடையில் இருந்தபோது, எங்கள் கடை முன்பாக ஒரு இருசக்கர வாகனம் மோதிய சத்தம் கேட்டு போய் பார்த்தேன். நான் பார்த்தபோது ஒரு ஐயா அடிபட்டு கிடந்தார். அவருக்கு தலையில் இரத்தக் காயம் இருந்தது. ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. வண்டி மட்டும் தான் அங்கு இருந்தது" என்றும் சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்தபோது, "இந்த விபத்தினை யார் ஏற்படுத்தினார்கள், எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான், " என்று சாட்சியமளித்துள்ளார்.

13. சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியாக காட்டப்பட்டுள்ள அ.சா.4ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், "ஆஜர் எதிரியைத் தெரியும். 14.12.2023ம் தேதி பகல் 12.45 மணிக்கு எனது கடைக்கு எதிரே கூட்டமாக இருந்தது. சத்தம் கேட்டு நான் என்னவென்று போய் பார்த்தேன். எங்கள் கடைக்கு டீ சாப்பிட வரும் ஒரு பெரியவர் விழுந்து கிடந்தார். நெற்றியின் வலது

பக்கம் காயம் ஏற்பட்டு இரத்தக் காயத்தோடு இருந்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அவரது சாட்சியத்தில், அவர் மீது மோதிய FZ இருசக்கர வாகனத்தில் இருந்து ஆஜர் எதிரியும் கீழே விழுந்து அடிபட்டு அவரும் அழுது கொண்டு இருந்தார் என்றும், அவரை தான் தூக்கி விட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். அவரது குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், "விபத்து யாருடைய கவனக் குறைவினால் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14. சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.சா.5ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், " ஆஜர் எதிரியைத் தெரியும் என்றும், சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக பகல் 12.30 மணிக்கு மேல் சத்தம் கேட்டு தான் வேலை பார்த்துக் கொண்டிருந்த தனது சிப்ஸ் கடையிலிருந்து ஓடிப்போய் பார்த்தபோது, அங்கு ஒரு பெரியவர் அடிபட்டுக் கிடந்தார் என்றும், பக்கத்தில் போய் பார்த்தபோது, தான் விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை பார்த்ததாகவும் கூறியுள்ளார். மேலும் அவரது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை அங்கு இருந்தவர்கள் சத்தம் போட்டுக் கொண்டு இருந்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். அவரது குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், இருசக்கர வாகனம் தான் காரணம் என்று கூறியிருந்தாலும், தான் சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரிதான் என்றும், இடித்த பிறகுதான் தான் சென்று பார்த்ததாகவும், தனது கடைக்கும், சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 200 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான் என்றும், தனது கடையில் இருந்து சம்பவ இடத்தை துல்லியமாக பார்க்க முடியாது என்றால் சரிதான் என்று ஒப்புக் கொண்டுள்ள நிலையில், விபத்து சம்பவத்தை நேரில் பார்த்துள்ளாரா என்பது சந்தேகத்திற்கு உரியதாகவே உள்ளது.

15. மேற்படி அ.சா.2, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், மூவரும் விபத்து நடந்த பின்னர் சத்தம் கேட்டுப் போய் பார்த்ததாக சொல்லியுள்ளார்கள். மேலும், இந்த விபத்தினை யார் ஏற்படுத்தினார்கள், எப்படி நடந்தது என்று தனக்கு நேரடியாகத் தெரியாது என்று அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார். அதேபோல், அ.சா.4-ம் விபத்து யாருடைய கவனக் குறைவினால் ஏற்பட்டது என்று தனக்குத் தெரியாது என்றும், சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை என்றும் கூறியுள்ளார். அ.சா.5-ம் இடித்த பிறகு தான் சென்று பார்த்ததாகவும் கூறியுள்ளார். மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து, சத்தம் கேட்டு தான் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்த்துள்ளார் என்பது தெரிய வருகிறது. விபத்து சம்பவம் நடந்தது என்பதற்கு அவர்கள் ஒரு சாட்சிகளேத் தவிர, வழக்கின் எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக் குறைவால் தான் மேற்படி விபத்து சம்பவம் நடைபெற்றது என்பதை நிரூபிப்பதற்கான சாட்சியமாக அவர்களது சாட்சியம் அமையவில்லை. மேலும், எதிரியின் அடையாளம் குறித்து கூறியிருந்தாலும், அதிவேகமாகவும், கவனக் குறைவாகவும் எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்பது குறித்து மேற்படி மூவரின் சாட்சியங்களும் அமையாத நிலையில், அவர்களது சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கினை நிரூபிப்பதற்கான சாட்சியமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. அ.சா.1 விபத்து சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்றது குறித்தும், புகார் மனு கொடுத்தது பற்றியும் சாட்சியமளிப்பவராக சாட்சிப் பட்டியலில் காட்டப்பட்டு விசாணை செய்யப்பட்டுள்ளார். அவரது முதல் விசாரணையில் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சென்றது குறித்து கூறியுள்ளார். அவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, புகார் மனுவை தான் நேரடியாக காவல் நிலையத்திற்கு சென்று கொடுத்தேன் என்றால் சரிதான்

என்றும், புகார் மனுவை தான் எழுதவில்லை என்றால் சரிதான் என்றும், புகார் மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்குத் தெரியாது என்று சொன்னால், தான் சொல்ல சொல்லத் தான் எழுதினார்கள் என்றும் கூறியுள்ளார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள அ.சா.6 சிறப்பு சார்பாய்வாளர் மேற்படி புகாரைப் பெற்று வழக்கு பதிவு செய்தது குறித்து கூறியுள்ளார். எனவே, விபத்து ஒன்று ஏற்பட்டு அதற்காக அ.சா.1 புகார் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

17. பார்வை மகஜரில் கையொப்பமிட்ட சாட்சியான அ.சா.3ன் சாட்சியத்தில், 14.12.2023ம் தேதி இராஜராஜேஸ்வரி மருத்துவனை அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது, மதியம் 3.00 மணியளவில் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்தினை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார் என்றும், தன்னிடமும் நாகராஜ் என்பவரிடமும் சாட்சி கையொப்பம் செய்ததாக கூறியுள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து போலீசார் முறைப்படி சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. சம்பவ இடமானது வாகனக் போக்குவரத்தும் கூட்ட நெரிசலும் அதிகமாக இருக்கும் என்றும், சம்பவ இடத்தில் இருந்து ஒரு 20 அடி தள்ளி ஒரு வேகத் தடை உள்ளது என்றால் சரிதான் என்றும், பொதுவாக எல்லா வாகனமும் அங்கு மெதுவாகத் தான் வரும் என்றால் சரிதான் என்றும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளார்.

18. அ.சா.1ன் சாட்சியத்துடன் வழக்கை விசாரணை செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்த அ.சா.7 சார்பு ஆய்வாளரின் குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், சம்பவ இடத்திற்கு அருகில் திருவள்ளுவர் சாலை ரோடு மகாஜோதி ஓட்டல் சந்திப்பில் வேகத்தடை ஒன்று உள்ளது என்றால் சரிதான் என்றும், மேற்படி வேகத் தடையை பார்வை

மகஜரிலோ, மாதிரி வரைபடத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும் ஒப்புக் கொண்டுள்ளார். விபத்து நடந்த இடத்திற்கு அருகே வேகத் தடை இருந்துள்ள நிலையில், எதிரி அதிவேகமாக வாகனத்தை ஓட்டிச் செல்ல வாய்ப்பிருக்க இயலாது என்ற எதிரி தரப்பு வழக்கறிஞரின் வாதத்தினை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. சம்பவ இடத்திற்கு அருகே பவர் ஆப்டிகல்ஸ், பலாஜி டீ ஸ்டால் ஆகிய கடைகள் உள்ளன என்றால் சரிதான் என்றும் கூறியுள்ள நிலையில், மேற்படி கடைகளில் வேலை பார்ப்பவர்களை தனிநபர் சாட்சிகளாக விசாரணை செய்யப்படாததற்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் இல்லை.

19. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது என்பது இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. விபத்து சம்பவத்தைப் பொறுத்து, சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக காட்டப்பட்டுள்ள அ.சா.2, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்ததில், எதிரியின் கவனக்குறைவாலும், அதிவேகத்தாலும் தான் விபத்து ஏற்பட்டது என்பது குறித்து உறுதிப்படுத்தும் சாட்சியமாக அமையவில்லை. மேலும், எதிரியின் அடையாளம் குறித்து மேற்படி சாட்சிகள் கூறியிருந்தாலும், எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக் குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்பதற்கு அவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி அரசு தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்று ஆவணங்களை நன்கு கவனமுடன் பரிசீலனை செய்ததில், எதிரி தனது அஜாக்கிரதை, கவனக் குறைவு, அதிவேகம் ஆகியவற்றால் தான் விபத்து ஏற்படுத்தி ராஜு என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்பது குறித்து அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்பது தெளிவாகிறது. இந்த வழக்கை பொறுத்த வரையில்,

விபத்து ஒன்று நடந்து இருக்கிறது என்பதும், அதில் ஒரு நபர் இறந்திருக்கிறார் என்பதும் அரசு தரப்பில் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால், விபத்து சம்பவத்தைப் பொறுத்த வரையில், அதற்கு இந்த எதிரிதான் முழுமையான காரணம் என்பதை இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தை மட்டும் வைத்து முடிவு செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. எனவே, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப் படுத்தி, நியாயமான சந்தேகங்களுங்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. அ.சா.8 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியமானது அவர் தனது அரசு பணியைச் செய்யும் போது, சொல்லப்பட்ட ஒன்றாகவே கருத இயலும். எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி தீர்ப்பு அளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. இறுதியாக மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் வழக்கை பரிசீலிக்கின்றபோது, அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப் படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்களுக்கு குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை பிரிவு 248(1) கு.வி.மு.ச–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

22. இந்த வழக்கில், வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 24–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.04.27 12:58:44 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.

**அரசுத் தரப்புச் சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சிவபாலன் |
| அ.சா.2 | திரு. மணிகண்டன் |
| அ.சா.3 | திரு. கணேசன் |
| அ.சா.4 | திரு. முகமது இப்ராகிம் |
| அ.சா.5 | திரு. வெள்ளையன் |
| அ.சா.6 | திரு. குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| அ.சா.7 | திரு. மனோகரன், சார்பு ஆய்வாளர் |
| அ.சா.8 | திரு. வெங்கடாசலபதி, காவல் ஆய்வாளர் |

**அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.12.2023 | தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 14.12.2023 | தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | 14.12.2023 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 14.12.2023 | தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 15.12.2023 | தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 15.12.2026 | தேதியிட்ட பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 20.12.2023 | தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.8 | 14.12.2023 | தேதியிட்ட விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.9 | 15.12.2023 | தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை |

**<u>அரசுதரப்பு சான்று பொருள் :</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும், சான்றாவணம் :</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சான்று பொருள் :</u>** இல்லை

<u>குறிப்பு:–</u>

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.

2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

3. இந்த வழக்கில் சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.04.27 12:58:31 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.